1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

R.C.O.P.No.50 /2016

2026 வது ஆண்டு மார்ச் மாதம்06–ம் நாள் எ.ம.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் (2069 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ராஜீவ் காந்தி(கிளை மேலாளர், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, திருநெல்வேலிகிளை) | வட்டம் | பாளையங்கோட்டை |
| க.பெ /த.பெ | திரு.பாண்டியன் | கிராமம் | NGO காலணி |
| வயது | 38 | | |

06.03.2026 முதல் விசாரணை

நான் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, திருநெல்வேலியில் கிளை மேலாளாராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையில் பேரில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் திருநெல்வேலியில் கிளையில் எப்போது இருந்து பணி செய்து வருகிறேன் என்றால் 2025 ம் வருடம் ஜீன் மாதம் முதல் பணி செய்து வருகிறேன். வங்கி கணக்கு எண்.025150050310936 ன் கணக்கு தொடங்கப்பட்ட விண்ணப்பத்தை நான் கொண்டு வந்துள்ளேன். அது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எந்த வருடம் மேற்படி கணக்கு 1991 ல் இருந்து தொடங்கப்பட்டுள்ளது. மேற்படி வங்கி கணக்கு எண் அபினவ் லேசர் பிரிண்ட் என்ற பெயரில் உள்ளது. அதன் உரிமையாளர் சுமதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கணக்கின் நடப்பு கணக்கை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இதற்கு முன்பு கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் பணி செய்து வந்தேன். நான் கொண்டு வந்து குறியீடு செய்த சா.சா.1 மற்றும் 2 ஆவணங்கள் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். வங்கி கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சா.சா.ஆ.1 ஆவணத்தில்

சுமதி உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை காட்டுவது சம்மந்தமாக ஏதேனும் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சா.சா.ஆ.1 ஆவணத்தில் சுமதியின் புகைப்படம் எதுவும் ஒட்டவில்லை என்றால் சரிதான். சேமிப்பு கணக்கு என்றால் மட்டுமே புகைப்படம் ஒட்டப்படும். மேற்படி கணக்கு நடப்பு கணக்கு என்பதால் புகைப்படம் ஒட்டப்படவில்லை. சா.சா.ஆ.1 ஆவணத்தில் சுமதி என்ற பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதில் உரிமையாளர் என்று முத்திரை எதுவும் குறிக்கப்படவில்லை என்றால் சரிதான். கையெழுத்து இடப்பட்டுள்ள இடத்திலும் சுமதி என்று தான் கையெழுத்து இடப்பட்டுள்ளது என்றாலும் உரிமையாளர் என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். சா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது பக்கத்தில் சுமதி என்பவர் தனிப்பட்ட முறையில் தான் கையெழுத்து இட்டுள்ளார் என்றாலும் பங்குதாரர் என்றோ, உரிமையாளர் என்றோ அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ–2 ஆவணத்தில் எந்தவொரு இடத்திலும் சுமதி பெயர் குறிப்பிடவில்லை என்றால் வணிக நிறுவனத்தின் கணக்கு என்பதால் அந்த நிறுவனத்தின் பெயர் தான் குறிப்பிடப்படும் அதில் சுமதியின் தனிப்பட்ட பெயர் வராது. செப்டம்பர் 2025ம் ஆண்டு முதல் தற்போது வரை உள்ள கணக்கை தான் கொண்டு வந்துள்ளேன் என்றும் அதற்கு முந்தைய கணக்கை கொண்டுவரவில்லை என்றால் என்னிடம் தற்போதைய நிலை குறித்து மட்டுமே கேட்கப்பட்டதால் நான்அவ்வாறு கொண்டுவந்துள்ளேன்.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.03.06 14:33:28 +0530

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி